RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s528

OPEN ACCESS

# திராவிடக் கருத்தியல் ஆட்சி

க. பன்னீர்செல்வம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா.

# Dravidian Ideology Regime

K. Panneerselvam [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author: ka.panneer73@gmail.com

Received: 20-07-2021
Revised: 18-06-2022
Accepted: 12-07-2022
Published: 25-08-2022

Check for updates

## ABSTRACT

There are various interpretations of the word Dravidian. The word Dravidian was coined by Thanthai Periyar as a symbol of Cultural Revolution rather than just a language term. Dravidian parties with progressive ideas like social reform as their policy objective have come to power and are implementing the principles of Dravidian ideology and implementing schemes. Thus, Tamil Nadu is growing as a more advanced state in social progress than other states of the Indian Union. However, some people are expressing the opinion that Tamil Nadu declined because of Dravidam. The uninitiated and the uninformed are opposing the benefits they are enjoying due to Dravidian ideology due to their ignorance. The success of Dravidian ideology lies in clarifying their ignorance as well. That is how Dravidian ideology has succeeded in clearing the ignorance of many. This article seeks to explain the rise of Tamil Nadu due to Dravidianism.

**Keywords:** Dravidian Ideology, Thanthai Periyar, Cultural Revolution, Dravidian parties

## முன்னுரை

திராவிடம் என்னும் சொல்லுக்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. தமிழ் என்னும் சொல்லிலிருந்தே திராவிடம் என்னும் சொல் வந்தது என்றும் அது சமசுகிருத்தில் இருந்து வந்தது என்றும் இருவேறு கருத்துகள் கூறப்படுகின்றன. திராவிட சிசு எனத் திருஞானசம்பந்தர் அழைக்கப்பட்டாலும் திராவிடம் என்னும் சொல் அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஆராய்ச்சியின் விளைவாகப் பல விளைவுகளைத் தமிழ் குமுகாயத்தில் ஏற்படுத்தத் தொடங்கியது (Caldwell, 2019; Subramanian, 2021). திராவிடம் என்னும் சொல்லாராய்ச்சி அது மொழியாராய்ச்சியின் பாற்பட்டதாகவே இருந்துவந்த நிலையில், அயோத்திதாசரின் ஆராய்ச்சியில் திராவிடம் என்னும் சொல் ஆரியத்திற்கு எதிரானது என்ற கருத்தும் ஆரியத்தை எதிர்த்த காரணத்தால் திராவிடர்கள் ஒடுக்கப்பட்ட வரலாறும் வலிமையாக எடுத்து வைக்கப்பட்டது. அதன் பிறகு தந்தை பெரியாரால் ஆட்கொள்ளப்பட்ட திராவிடம் என்னும் சொல் பல்வேறு பொருள்களை உள்ளடக்கிய அறிவுப்புரட்சிக்கான சொல்லாக மாற்றம் பெற்றது.

## திராவிட இயக்கம்

திராவிடம் என்னும் சொல் ஓர் இயக்கத்துக்கான சொல்லாக மாற்றம் பெற்றது அதன் உச்சம் என்று சொல்லலாம் (Vetriselvan, 2021). நீதிக்கட்சியில் இருந்த தந்தை பெரியார் அவ்வியக்கத்திற்குத் திராவிடர் கழகம் எனப் பெயரை மாற்றினார். 1944 ஆம் ஆண்டு பெரியாரின் தலைமையில் திராவிடர் கழகம். செயல்படத் தொடங்கியது. நீதிக்கட்சியும் திராவிடர் கழகமும் மொழி, பெண்ணுரிமை, இன

உரிமைகள், பகுத்தறிவு, மூடநம்பிக்கை ஒழிப்பு, போன்ற நோக்கங்களுடன் செயலாற்றின. கருத்து வேறுபாடு காரணமாகத் தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்த பேரறிஞர் அண்ணா 1949 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் இயக்கத்தை உருவாக்கினார். இவ்வியக்கமானது மொழி, கலை, நாடகம், இலக்கியம், திரைப்படம், அரசியல், ஆட்சி என அனைத்துத் துறைகளிலும் பண்பாட்டுப் புரட்சிக்கு வித்திட்டது. நீதிக்கட்சி, திராவிடர் கழகம் மற்றும் திராவிட முன்னேற்ற கழகமும் உருவானபிறகு தமிழகம் அடைந்த வளர்ச்சி மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் மிகச் சிறப்பானதாகும்.

1967ஆம் ஆண்டு தி.மு.க. தமிழ்நாட்டில் முதன்முதலாகப் பெரும்பான்மையான சட்டமன்றத் தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது. இப்போதும் (2021) தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் திரு. எம்.ஜி. ஆரால் தோற்றுவிக்கப்பட்ட அதிமுக வின் ஆட்சியும் நடைபெற்றது. 1967 தொடங்கி ஏறக்குறைய அரைநூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழகத்தைத் திராவிடக் கட்சிகளே ஆண்டு வருகிறது. முன்னதாக நீதிக்கட்சியின் ஆட்சி காலத்தையும் சேர்த்தால் 60 ஆண்டுகளுக்கும் மேலாகக்கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

தமிழகத்தில் ஆட்சி செய்த கட்சிகளுள் கொள்கை, குறிக்கோளுக்கு முன்னுரிமை தருகின்ற கட்சிகளாக நீதிக்கட்சியையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் குறிப்பிடுவது ஏற்புடைதாக இருக்கும். திமுக தமது கொள்கைக்காக ஆட்சியையும் இழந்துள்ளது. இக்கட்சிகள் தங்களது ஆட்சி காலத்தில் கொண்டுவந்த மக்கள் நலத்திட்டங்கள் யாவும் முற்போக்கான திட்டங்கள் ஆகும். பொருளாதாரத்தை முன்னேற்றமாகக் கருதாமல் சமூக வளர்ச்சியே உண்மையான முன்னேற்றத்திற்கான அடிப்படை எனக் கருத்தில் கொண்டு நலத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன (Muthusamipillai, 2008). ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, “திராவிடத்தால் வீழ்ந்தோம்! ““திராவிடம் என்ன செய்தது? “என்பது போன்ற சில கிணற்றுத் தவளைகளின் குரல்களைக் கேட்கமுடிகிறது. அவர்கள் கடந்த 50 ஆண்டு வரலாற்றைப் பரட்டிப் படித்தால் தங்களது கருத்தைத் திரும்பப் பெறுவார்கள் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

## திராவிடத்தால் வளர்கிறோம்

திராவிடக் கருத்தியலை உள்ளடக்கிய முற்போக்கான சிந்தனைகள் அடங்கிய பல நலத்திட்டங்கள் நீதிக்கட்சி மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தால் உருவாயின (Veerapandian, 2012). அதேபோல நீதிக்கட்சி மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தால் உருவான நலத்திட்டங்களுக்குள் திராவிடக் கருத்தியலை உள்ளடக்கிய முற்போக்குச் சிந்தனைகளைக் காணமுடிகிறது. எனவே, திராவிடத்தால் வீழ்ந்தோம் என்று கூறுவது ஏற்புடையதன்று. திராவிடத்தால் எழுந்தோம்! திராவிடத்தால் வளர்கிறோம்! திராவிடத்தால் உயர்கிறோம்!! என்பதே உண்மையாகும்.

நீதிக்கட்சி, தி.மு.க. ஆகியவை தங்களது ஆட்சியில் பின்வரும் முற்போக்கான நலத்திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளன. தமிழ், தமிழர், தமிழ்நாடு அடைந்த வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் ஏதுவான முற்போக்கு நலத்திட்டங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. சமூக நீதியை நிலைநாட்டும் இடஒதுக்கீடு முறையை நீதிக் கட்சி அறிமுகப்படுத்தி நடைமுறைக்கும் கொண்டு வந்தது,
2. நீதிக்கட்சிக் காலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை,
3. இந்து சமய அறநிலைய பாதுகாப்புச் சட்டம்,
4. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகச் சட்டம்,
5. தேவதாசி ஒழிப்புச் சட்டம்,
6. பார்ப்பனர் அல்லாதார் கல்வி கற்க ஏற்பாடு,
7. அதிகார மையங்களில் பார்ப்பனரல்லாதார் இடம்பெற வாய்ப்புகளைப் பெறுதல்,
8. உயர்கல்வி, அரசுப் பதவிகளில் பார்ப்பனரல்லாதாருக்கு வாய்ப்பு,

9. தமிழில் சமஸ்கிருதம், இந்திமொழிகளின் கலப்புக்கும் எதிர்ப்பு,

10 மாநிலத்திற்கு தமிழ்நாடு எனப் பெயர்சூட்டியது,

11. சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம்,

12. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கச் சட்டம்,

13. ஏழைப்பெண்களுக்குத் திருமண நிதியுதவி வழங்கும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகைத் திட்டம்,

14. விதவைகள் மறுமணத்திற்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

15. கலப்பு மணத் தம்பதிகளுக்கு ஊக்கத் தொகை, மற்றும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை

16. மகளிர் இலவசப். பட்டப்படிப்புத் திட்டம்

17. ஏழைப் பெண்கள் திருமண நிதிஉதவித் திட்டம்.

18. அரசுப் பணியில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு.

19. கலப்புக் குடும்பத்துப் பெண்களுக்குப் பேறுகால நிதியுதவித் திட்டம்,

20. அரசுப்பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயனத் திட்டம்

21. பலதாரத் தடைச் சட்டம் இயற்ற மத்திய அரசுக்கு தி.மு.க. துணை நின்றது,

22. இருமொழித் திட்டம்,

23. தமிழுக்கு செம்மொழி சிறப்பைப் பெற்றுத் தந்தது,

24. ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை,

25. தமிழை ஆரம்பக் கல்வி முதல் உயர்நிலைக் கல்விவரை படிக்க சட்டம்,

26. கல்லூரிகளில் கற்பிக்கும் மொழியாகத் தமிழை அறிமுகப்படுத்தியது,

27. கர்பிணி பெண்களுக்கு நிதி உதவித் திட்டம்,

28. மகளிர் சுய உதவி குழுக்கள் அமைத்தது,

29. மாணவர்களுக்கு இலவச பயண அட்டைத் திட்டம்,

30. அண்ணா மறுமலர்ச்சி திட்டம்,

31. நமக்கு நாமே திட்டம்,

32. நலிவுற்ற குடும்பநலத் திட்டம்,

33. விவசாய கூலி வேலை செய்வோர் நல வாரியம்,

34. பொது கூலி வேலை செய்வோர் நல வாரியம்,

35. போக்குவரத்து துறை என்ற துறையை உருவாக்கிப் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கியது,

36. அரசு ஊழியர்கள் மீதான ரகசிய அறிக்கை (சிவப்பு நாடா) முறையை ஒழித்தது,

37. பார்வை இழந்தோர்க்கு இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டம்.

38. பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்.

39. விவசாயிகளுக்கு - நெசவாளர்களுக்கு - இலவச மின்சாரத் திட்டம்.

40. மலம் சுமக்கும் துப்புரவுத் தொழிலாளர் மறுவாழ்வுக்கு மாற்றுத் திட்டம்,

41. உலகத் தரத்தில் அரசு நவீன நூலகம்

போன்ற பல எண்ணற்ற நலத்திட்டங்களைத் திராவிடக் கட்சிகளான நீதிக்கட்சியும் திமுகவும் செயல்படுத்தியுள்ளன.

மேற்காணும் திட்டங்கள் பல பிறமாநிலங்களில் இல்லாதவைகளாகும். மேற்காணும் பல திட்டங்கள் குறித்துப் பிற மாநிலங்கள் எல்லாம் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாதவைகளாகும். ஒருவேளை மேற்காணும் பல திட்டங்களைப் பிற மாநிலங்கள் செயல்படுத்தத் துணிந்தால் அம்மாநில மக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகி அக்கட்சி ஆட்சியையே இழக்க நேரிடும். ஆனால் தமிழகத்தில் இது எப்படி சாத்தியமானது? என்ற வினாவை எழுப்பினால் அதற்கு விடை தந்தை பெரியார் என்பதைத் தவிர வேறெதுவும் இருக்க வாய்ப்பில்லை. இந்தச் சாதனைகள் எதுவும் எளிதாக நிறைவேறிவிடவில்லை. அதற்குத் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகளின் உழைப்பு அளப்பரியது அவர்கள் இந்த மண்ணையும் மக்களையும் பக்குவப்படுத்தி வைத்திருப்பதாலேயே மேற்காணும் பல புரட்சிகரத் திட்டங்களைச் செயல்படுத்த முடிகிறது மற்ற மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு தனித்தன்மை உடையதாகவும் விளங்குகிறது.

தமிழகத்தில் இன்றைய அரசு அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கியுள்ளது. இது இந்திய ஒன்றியத்தையே, ஏன்? உலக அரங்கையே உற்றுநோக்க வைத்துள்ளது. இத்திட்டத்திற்கு வர்ணாசிரமக் கொள்கைகளைக் கடைபிடிக்கும் தேசியக் கட்சியின் தமிழகத் தலைவர்களும் ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் பெரியார் விதைத்த திராவிடக் கருத்தியல் தமிழக மக்களின் மனங்களில் தமிழர்களின் உணர்வுகளில் இரத்தமும் சதையுமாக ஊறிக்கிடக்கிறது என்பதால்தான்.

## சமத்துவபுரம்

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தைப் போன்ற மற்றுமொரு சிறப்பு வாய்ந்த திட்டம் “சமத்துவபுரம் “திட்டமாகும். அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளை சமத்துவபுரம் எனும் பெயரில் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கி 1997 ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் இத்திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்தது பிறகு 1999 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்குப் பெரியார் நினைவு சமத்துவபுரம் எனப் பெயரிடப்பட்டது.

சாதிக்குகொரு தெரு எனப் பிரிந்து கிடந்த சமுதாயத்தை ஒன்றாக்கிடப் பெரியார் போன்ற சீர்திருத்தவாதிகள் எவ்வளவோ போராடிப் பார்த்தனர், கனவு கண்டனர். அதைச் செயல்படுத்திக் காட்டுவதில் வெற்றி கண்டவர் கலைஞர் மு. கருணாநிதி என்றால் அது மிகையாகாது. திராவிட ஆட்சியின் சிறப்புக்களுள் இத்திட்டம், பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய திட்டமாகும்.

## மகளிருக்கான மறுவாழ்வுத் திட்டங்கள்

சமூகத்தில் பெண்கள் ஆண்டாண்டு காலமாக அநீதிகளுக்கு உள்ளாகி வந்த நிலையில் திராவிடக் கட்சிகளின் வரவால் பெண்களின் வாழ்வில் எண்ணிப்பார்க்க முடியாத மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதை யாராலும் மறுக்கவியலாது. குறிப்பாகக் கணவனை இழந்த பெண்கள் பழமை எண்ணங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளால் மிகவும் பாதிக்கப்பட்டு வந்த நிலையில் திராவிடக் கட்சிகள் தமது முற்போக்குச் சிந்தனைகளைப் பரப்பி பல திட்டங்களையும் சட்டங்களையும் ஏற்படுத்தி அப்பெண்களுக்குப் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் வழங்கியது. சுயமரியாதைத் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கச் சட்டம், விதவைகள் மறுமணத்திற்கு நிதியுதவி வழங்கும் திட்டம், கலப்பு மணத் தம்பதிகளுக்கு ஊக்கத் தொகை, மற்றும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை ஏழைப்பெண்களுக்குத் திருமண நிதியுதவி வழங்கும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகைத் திட்டம், மகளிர் இலவசப். பட்டப்படிப்புத் திட்டம், ஏழைப் பெண்கள் திருமண நிதிஉதவித் திட்டம்., அரசுப் பணியில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு. கலப்புக் குடும்பத்துப் பெண்களுக்குப் பேறுகால நிதியுதவித் திட்டம், அரசுப்பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயனத் திட்டம்

போன்ற திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தியது மகளிரின் வாழ்வில் ஒளியேற்றிய முன்னோடித் திட்டங்களாகும்.

## சமத்துவக் குடும்பம்

திராவிடக் கட்சி உறுப்பினர்களும் தலைவர்களும் முற்போக்குச் சிந்தனைகளை ஆழமாக உள்வாங்கியவர்கள் எனபதை அவர்களது வாழ்வியலிலிருந்து அறிந்துகொள்ள முடியும். மூடநம்பிக்கை எதிர்ப்பு, சமூகச் சீர்திருத்தம், பகுத்தறிவு, சாதி ஒழிப்பு போன்றவற்றுக்கு முன்னுரிமை தருவதில் திராவிடக் கட்சியினர் முன்னோடிகளாக உள்ளதைக் காணமுடிகிறது. கலைஞர் மு. கருணாநிதி தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஆகியோருக்கு மற்ற சமூகத்திலிருந்து பெண் எடுத்தும் பெண் கொடுத்தும் திருமணம் செய்துவைத்து, புரட்சிக்கு உரிய உண்மையான தலைவராக விளங்கியது திராவிடர்களைத் தலைநிமிரச் செய்யும் எடுத்துக்காட்டாகும்.

## முடிவுரை

திராவிடக் கருத்தியல் என்பது மக்களுக்கானது. மக்களுக்கு எதிரான கருத்துகளுக்கு எதிரானது. திராவிடக் கருத்தியல் என்பது வளர்ச்சியின் குறியீடு. திராவிடக் கருத்தியலை எதிர்ப்பவர்களும் திராவிடக் கருத்தியலால் உருவாகிய பயன்களை அனுபவித்து வருகின்றனர். அதன் பயன்களைத் தவிர்த்துவிட்டு எதிர்ப்பாளர்கள் மகிழ்ச்சியாக வாழமுடியாது. திராவிடக் கருத்தியலால் தாங்கள் அனுபவித்து வரும் பயன்களை அறியாதவர்களும் தெரியாதவர்களும் தங்களது அறியாமையால் எதிர்த்து வருகின்றனர். அவர்களது அறியாமையையும் தெளிய வைப்பதில்தான் திராவிடக் கருத்தியலின் வெற்றி அடங்கியுள்ளது. அப்படித்தான் பலருடைய அறியாமையைத் தெளிய வைப்பதில் திராவிடக் கருத்தியல் வெற்றி பெற்றுள்ளது. அவ்வகையில் திராவிடக் கருத்தியலுக்குத் தோல்வி என்பது இல்லை! அறியாமை அகற்றுவதில் திராவிடக் கருத்தியலின் வெற்றி தொடரும்! திராவிடக் கருத்தியலுக்கு எதிராகப் பிதற்றுபவர்களின் பித்தம் தெளியும்.

## References

Caldwell, R, (2019) Dravida oppilakkanam, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Muthusamipillai, S., (2008) Neethikatchi Varalaru, VOC Noolagam, Chennai, India.

Subramanian, P.R., (2021) Caldwellin Dravida Allathu Thennindia Kudumbamozhigalin Oppilakkana Pathippugal, Parisal Pathippagam, Chennai, India.

Veerapandian, S., (2012) Dravidaththaal Ezhunthom, Sixth Sense Publications, Chennai, India.

Vetriselvan, M., (2021) Dravidam Arivom, Karunchattai Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License